பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 மார்கழி 2 முஹறம் 5 இதழ் 307
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 17-12-77




# கூட்டணி கனகரத்தினம் விலகுவாரா? விலக்கப்படுவாரா?

(கொழும்பு)

பொத்துவில் தொகுதி இரண்டாவது எம்.பி. திரு. எம். கனகரத்தினம் எந்தச் சமயத்திலும் தமிழர் கூட்டணியிலிருந்து வெளியேறி ஆளும் கட்சியான ஐக்கியதேசியக் கட்சியில் சேர்ந்துகொள்வார் என்று பேரவை வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இதேசமயம் திரு. கனகரத்தினத்தின் சமீபத்திய நடவடிக்கைகளின்படி அவரை விலக்கி கூட்டணியிலிருந்து வெளியேற்றுவதைத்தவிர வேறுவழியில்லையென்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

என்றாலும் திரு. கனகரத்தினம் தமது எம்.பி.பதவியை ராஜினாமாச் செய்யமாட்டாரென்றும் முன்னர் திரு. வி. எக்ஸ். மார்ட்டின் கொடுத்தது போன்ற விளக்கத்தையே கொடுப்பாரென்றும் பேரவை அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

## பேரவையில் அரிசியுடன் 'தர்மர்'

[கொழும்பு]

மானிப்பாய்த் தொகுதியில் தரமற்ற கூப்பன் அரிசி விநியோகம் செய்யப்படுவதாகக் கூறிய தொகுதி உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் நேற்று முன்தினம் பேரவையில் மானிப்பாயில் விநியோகம் செய்யப்பட்ட ஒருபிடி அரிசியைக்கொண்டு வந்து காட்டினார்.

அமைச்சர்கள் திருவாளர்கள் ஆர். பிரேமதாசா டபிள்யூ. தேவநாயகம், எஸ். பி. ஹேரத் ஆகியோர் அந்த அரிசியைப் பார்வையிட்டனர்.

இந்த அரிசி அவ்வளவு மோசமில்லை என்றும் சிறிது தீட்டப்படவில்லை என்றும் உணவு அமைச்சர் திரு. ஹேரத் கூறினார். [ம இ]

## "சிங்களத்தைத் திணிப்பது எமது நோக்கமல்ல"

—கல்வி அமைச்சர்

(கொழும்பு)

சிங்கள மொழியைத் தமிழரின் தொண்டைக்குள் திணிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இடையாதென்றும் ஆங்கிலத்தையே தொடர்பு மொழியாக வைத்திருக்க வேண்டுமென்று தமிழர் கூட்டணியினர் விரும்புவதாகத் தெரிகிறதென்றும், ஆறாயிரம் ஏழாயிரம் மைல்களுக்கப்பாலுள்ளவர்களின் மொழியைத் தொடர்பு மொழியாகக் கொள்ளாமல் சிங்களத்தையும் தமிழையும் இந்நாட்டுமக்கள் கற்று தொடர்பு கொள்வதில் என்ன தவறு என்றும் கல்வி அமைச்சர் திரு நிசங்கா விஜேரத்தின இன்று தேசிய அரசுப் பேரவையில் கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் கேட்டார்.

## வர்த்தக அமைச்சர் நாளை யாழ். வருகிறார்!
### உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளில் கூட்டணியினர் கலந்துகொள்வர்

[யாழ்ப்பாணம்]

இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணக் கிளை தலைக்கெனச் சொந்தமாகக் காணி வாங்கி இரண்டு மாடிக் கட்டிடமொன்றை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைத்திருக்கின்றது.

இக்கட்டிடத்தை யாழ்ப்பாணத்தொகுதிப் பிரதிநிதி திரு. வெ. யோகேஸ்வரன் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் பத்து மணிக்குத் திறந்து வைக்கவிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத்முதலி பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார்.

அமைச்சர் திரு. அத்துலத்முதலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கும்போது அவருக்கு உற்சாகமான வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகளைப் பலரும் செய்துள்ளனர்.

காப்புறுதிக்கிளையின் புதிய கட்டிடத் திறப்புவிழாவையொட்டி நாளை மாலை யாழ். திறந்தவெளியரங்கில் கலை நிகழ்ச்சியொன்றும் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அமைச்சர் திரு அத்துலத்முதலி இப்பகுதியின் அபிவிருத்தி சம்பந்தமான பல உத்தியோக ரீதியான நிகழ்ச்சிகளிலும் மாநாடுகளிலும் கலந்துகொள்ளவிருக்கிறார்.

(6ம் பக்கம் பார்க்க)

## 'சுதந்திரம் பெற்றபோது சம அந்தஸ்து இருந்தது
### இல்லையேல் அப்போதே தமிழ் ஈழம் எழுந்திருக்கும்"

[கொழும்பு]

'இலங்கை சுதந்திரமடைந்தபோது தனிச்சிங்களச்சட்டம் இருந்திருந்தால் அன்றே தமிழ் ஈழக் கோரிக்கை எழுந்திருக்கும்.'

தேசிய அரசப்பேரவையில் பேசிய ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டிதர் கா. பொ இரத்தினம் மேலும் கூறியதாவது: 1944ம் ஆண்டு தனிச்சிங்களம் அரச மொழியாகக்கொண்டு வரப்பட்டபோது, திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன தமிழும் சிங்களமும் அரச மொழியாகத் திருத்தம் கொண்டுவந்தார். 1948ம் ஆண்டு இந்நாடு சுதந்திரம் அடைந்தபோது இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து இருந்தது.

சிங்கள மக்களுடன் சம அந்தஸ்துடன் வாழவேண்டும் என்பதற்காகவே அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கைவிடுத்தார்.

தமிழருக்கு இனிமேலும் சம அந்தஸ்து கிடைக்காதென்பது பிரதமரின் பேச்சிலிருந்து தெரிகிறது. ஆதலால் நாம் தொடர்ந்து எமது உரிமைக்காகப் போராடுவோம். இங்கு பல உறுப்பினர்கள் சமத்துவம் பற்றிப் பேசினார்கள். ஓரினத்தை ஒதுக்கிவிட்டு எப்படி சமத்துவம்பற்றி பேசலாம்.

அத்திவாரம் உடைந்து விட்டது. பலமான வீட்டைகட்ட முடியாது. நாங்கள் பிரிந்து சென்று புதிய வீட்டைக்கட்ட அனுமதி தாருங்கள்

சிங்கள மக்கள் இந்நாட்டில் தங்கள் தாய்மொழியை மட்டும் கற்று உத்தியோகம் பெறலாம். ஆனால் தமிழர்கள் தங்கள் தாய்மொழியை ஏற்று தமிழ்ப்பிரதேசத்திலும்கூட உத்தியோகம் பெறமுடியாதிருக்கிறது.

சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் கற்கவேண்டும். அது சரிவராவிடில் 'தமிழ் ஈழம்' அமைப்பதுதான் ஒரே வழியாகும். [ம]

## திருமதி பண்டாரநாயகா காணி விற்பனவு பிரச்னை
### அமைச்சரின் விளக்கமும் சபாநாயகரின் குறிப்பும்!

(கொழும்பு)

1972ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காணிச் சீர்திருத்தச் சட்டம் பேரவையில் நிறைவேறிய பின்னர் முன்னாள் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவும், அவரது புதல்வர் திரு. அனுரா பண்டாரநாயக்காவும் 56 ஏக்கர் காணிகளை விற்று 6 லட்சம் ரூபாவைப் பெற்றனர் என்று கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்யூ நேற்று தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்திருந்தார்.

திரு. சிறில் மத்யூ, காணி விற்பனை குறித்து அண்மையில் பேரவையில் வெளியிட்ட சில தகவல்கள் தொடர்பாக திரு. அனுரா பண்டாரநாயக்கா பேரவையில் வெளியிட்ட அறிக்கைக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே திரு. மத்யூ நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது!

1972-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி காணிச் சீர் திருத்தச் சட்டம் பேரவையில் நிறைவேறியிருந்தும் அதே மாதம் 26-ம் திகதியே அப்போதைய சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்ன அதில் கைச்சாத்திட்டார். இந்த இடைக்காலப் பகுதியிலேயே மேலே குறிப்பிட்ட 56 ஏக்கர் காணிகள் விற்கப்பட்டுள்ளன. இக்காலப் பகுதியில் இதற்கான 12 உறுதிகள் மாற்றப்பட்டன.

காணிச் சீர்திருத்தச்சட்டம் 18-ம் திகதி பேரவையில் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதே தினம் 2 உறுதிகளும் 23-ம் திகதி 7 உறுதிகளும் செப்டம்பர் 5ந் தேதி 3 உறுதிகளும் மாற்றம் செய்யப்பட்டு காணிகளை அவர்கள் விற்றுள்ளனர்.

(6ம் பக்கம் பார்க்க)

வெங்காயம், மிளகாய் நல்ல காரம்!
அவற்றின் விளைச்சலோ அபாரம்!!
அவற்றை மேய வரும் பூச்சிகளோ சம்ஹாரம்!!!
இதுவே

அம்புஷ் 25

2 அவுன்ஸ் போத்தல்
விலை: ரூபா 35-00
(ஒரு ஏக்கருக்குப் போதுமானது)
இருமிநாசினி தரும் உபகாரம்!!!!

மேலதிக விபரங்கட்கு:
விவசாய ஆலோசகர்:

த ரோரு லிமிட்டெட்,

82, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651

யாழ். கிளை
இலங்கை வங்கி ஊழியர் சங்கம்

18-12-77இல் நடைபெறவிருந்த பரிசுச் சீட்டிழுப்பு, கலைஞர்கள் பங்குபற்ற முடியாத காரணத்தினால் 15-1-78இல் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.

--நகுலேசன்
பிரதம அமைப்பாளர்

7944

## வரிவிளம்பரம்

### தேவை

தங்குமிட வசதிகளுடன் கூடிய ஒரு சிறிய வியாபார நிலையம் வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம்; 7938, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7938

எல்லாவிதமான மரத்தளபாடங்களும் செய்யக்கூடிய அனுபவமுள்ள மரவேலைத் தொழிலாளர்கள் தேவை. விபரங்களுக்கு: S இராசேந்திரம், C/o உபகபால் நிலையம், கொழும்புத்துறை. 7940

கணக்கு எழுதுவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. விபரங்களுக்கு நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். சலாய்ஸ், 95 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 7920

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும், வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

G. C. E. (A/L) G. A. Q. B. A., G. S. Q., B. Sc. வகுப்புகளுக்கு இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோககணிதம், கணக்கியல், பொருளியல், புவியியல் கற்பிப்பதற்கு பட்டதாரிகள் தேவை. 26-12-77க்கு முன் விண்ணப்பிக்கவும்: நிர்வாகஸ்தர், உயர்கலைக் கல்லூரி, யாழ்ப்பாணம். 7930

### விற்பனைக்கு

புதிய இசைத்தட்டுகள் சிறந்த கிறிஸ்மஸ் நல்வைபவம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ், 9, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். 7934

புஜெயிலர், மற்றும் இன நான்கு மாத சேவல்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. மாலினி போல்ரிபாம், 87, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 7903

### WANTED

Retired Chief Clerk State Corporation Efficient Accounts Typewriting seeks employment Apply Cumaraswamy Ambatenne, Matugama. 7932

நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்

### கேள்விப் பத்திரம்
வெற்றுச்சாக்கு

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் 9500 வெற்றுச்சாக்குகள் வரை விற்பனைக்குண்டு. கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்திக் கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளவேண்டும். கேள்விப் பத்திரங்கள் 21-12-77 பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படும். 21-12-77ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகக் கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

பொது முகாமையாளர்.
நல்லூர் ப. நோ. கூ. சங்கம். 7936


# வயோதிபரிடம் ரூ. 1100 திருட்டு

[யாழ்ப்பாணம்]

வயோதிபர் ஒருவரிடமிருந்து 1100 ரூபா பணம் பிக்பொக்கட் அடிக்கப்பட்டது.

தெல்லிப்பளைச் சந்தியில் நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

கடந்த புதன்கிழமை பிற்பகல் பிரஸ்தாப வயோதிபர் தமது மனைவி சகிதம் காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் தெல்லிப்பளைச் சந்தியில் இருந்து ஏற முற்பட்டபோது ஜனநெரிசலைப் பயன்படுத்தி எவரோ அவரது நாஷனல் ஷேர்ட்டிலிருந்து இப்பணத்தைத் திருடிவிட்டனராம்.

பணம் பறிபோய்விட்டதே என்ற அதிர்ச்சியும் வேதனையும் அடைந்த இவ்வயோதிப தம்பதிகள் 'எல்லாவற்றையும் முருகன் பார்த்துக் கொள்வான்' என்று இறைவன்மீது பழியைப் போட்டுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தனராம்.

கல்நெஞ்சம் படைத்த இப் பிக்பொக்கட் பேர்வழிகளைக் கைதுசெய்ய முக்கிய சந்திகளில் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் முடியாதுபோய்விடுகிறதே என விசனத்துடன் பேசிக்கொள்ளப்படுகிறது. [உ]

'வட்டு தொகுதிக்கு

## ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி கல்விக்கே'

— திருநாவுக்கரசு எம். பி

[பண்டத்தரிப்பு]

"எமது தொகுதிக்கென அரசாங்கம் ஒதுக்கும் பணத்தில் கூடிய பகுதியைப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கே செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறேன். வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள 55 பாடசாலைகளில், கடந்த காலத்தில் எவ்வித உதவிகளையும் பெறாத பாடசாலைகளுக்கே நிதி ஒதுக்குவதில் முதலிடம் அளிப்பேன்."

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்தக் கலைவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வட்டுக்கோட்டை எம். பி திரு. தா. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. திருநாவுக்கரசு எம். பி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள ஒரே ஒரு மகளிர் கல்லூரி இதுவாகும். இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன். குறிப்பாக இங்குள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதுடன் நவீன வசதிகளடங்கிய விஞ்ஞான கூடம் அமைப்பதற்கும், புதிய வகுப்பறைகளை அமைப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பேன்."

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. க. சோமசுந்தரம், திருமதி உருத்திரா கந்தசாமி ஆகியோரும் இவ்விழாவில் உரையாற்றினார்கள். திருமதி திருநாவுக்கரசு கலைநிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்குப் பரிசில்களை வழங்கினார். [அ]

## குளிக்கும்போது சுட்டுக் கொலை

[கொஹுவல]

வௌ்ளவத்தையில் தம் நண்பர் ஒருவருடன் குளித்துக் கொண்டிருந்த டொறிக் பெரேரா என்பவர் இனந்தெரியாத நபரால் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமான இவரது கொலைபற்றி கொஹுவல பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். [உ]

நெல்லியடிப்
பட்டினசபை

## கேள்வி அறிவித்தல் 1978

1-1-78 தொடக்கம் 31-12-78 வரை நெல்லியடி மத்தியசந்தையைக் குத்தகைக்குக் கொடுப்பதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பிணைப்பணம் ரூபா 1000/-ம் பத்திரக்கிரயம் ரூபா 10/-ம் செலுத்தி 27-12-77 நண்பகல் 12 மணி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 28. 12. 77 முற்பகல் 10-30 வரை.

இதுசம்பந்தமான ஏனைய விபரங்களை பட்டினசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

பி. எம். யோசப்,
விசேட ஆணையாளர்.
நெல்லியடிப் பட்டினசபை.
பட்டினசபை அலுவலகம்,
நெல்லியடி, கரவெட்டி,
14-12-1977. 7935

## 'சமய ஒழுக்கநெறி பேணுக'

[கரியாலை]

"உலகில் உள்ள எல்லா வகைத்தானங்களிலும் கல்வித்தானமே மிகவும் சிறந்ததாகும். மாணவ-மாணவிகளை சமய ஒழுக்கங்களைப் பின்பற்றி வாழப் பயிற்சி அளிப்பது ஆசிரியர்களின் கடமையாகும். மாணவர்கள் சிறந்த ஒழுக்கசீலர்களாகவும், சிறந்த கல்விமான்களாகவும் வளரவேண்டும்."

இவ்வாறு நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் புதிய கட்டிடத்திறகு அத்திபாரக்கல் நாட்டி வேலையை ஆரம்பித்துவைத்து தொழிலதிபர் திரு. க. கனகராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. த. துரைசாமி தொழிலதிபரை வரவேற்றார்.

உபஅதிபர் திரு. எஸ். ஜே. அன்ரனி பேசுகையில், அரசாங்கம் வழங்கியுள்ள பன்னிரண்டாயிரம் ரூபாவையும்கொண்டு பாடசாலைக் கட்டிடத்தை நிர்மாணிக்க முடியுமென்றும், இதற்கான கூரைக்குவேண்டிய ஓடுகளை தொழிலதிபர் வழங்கி உதவவேண்டுமென்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கச்சார்பில் வேண்டுகோள் விடுத்தார். [உ]


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## மின்சாரம் பெற்றுத்தர கோரிக்கை

[எழுதுமட்டுவாள்]

எழுதுமட்டுவாள் பகுதிக்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் மின்சாரம் பெற்றுத்தருமாறு எழுதுமட்டுவாள் கிராம முன்னேற்றச் சங்கம் சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினத்திடம் கோரியுள்ளது.

எழுதுமட்டுவாள் கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. தா. கணபதிப்பிள்ளை, சாவகச்சேரி எம். பி.க்கு அனுப்பியுள்ள மகஜரில் மேலும் தெரிவித்திருப்பதாவது: 'பாடசாலையின் சீர்கேடுகளைப்போக்குவதுடன், புகையிரத நிலைய விஸ்தரிப்பு, சணல் உற்பத்தித் தொழிற்சாலை, நெசவு நிலையம் ஆகியவற்றிற்கும் பணம் ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (க-அ)

## நடவடிக்கைக் குழுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக் குழுக்கூட்டம் அடுத்தமாதம் 7ம் தேதி பண்டிருப்பில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் பொத்துவில் 2வது எம். பி. திரு. எம். கனகரத்தினத்தின் நிலை பற்றி ஆராயப்படவிருக்கிறது. [க-அ]

# இனக்கலவர விசாரணை அறிவித்தல்

1977-ம் ஆண்டு ஆகஸ்ட்—செப்டம்பர் காலத்து குழப்பங்களின் இயல்பையும் காரணங்களையும் விசாரித்து அறிக்கை செய்யவும் அவற்றால் உண்டான சேதங்களுக்கு நட்டஈடு சிபார்சு செய்யவும் இளைப்பாறிய நீதிபதி திரு. சன்சோனி தலைமையிலான விசாரணைக் குழுவை மாட்சிமை தங்கிய ஜனாதிபதி நியமித்திருப்பதால் தமிழ் பேசும் மக்களில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக தேவையானவையும் முக்கியமானவையென்றும் கருதப்படுகின்ற விபரங்களைத் திரட்டி ஆணைக்குழுவின் முன் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதால் கீழ்க்காணும் விபரங்களைப் பாதிக்கப்பட்டவர்கள் யாவரும் இன்றிலிருந்து பத்து நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பும்வண்ணம் கேட்கப்படுகின்றார்கள். முடியுமாயின் சமாதான நீதவான் முன்னிலையில் முடிக்கப்பட்ட சத்தியக் கடதாசியில் அனுப்புவது நன்று. சேதமடையாவிடினும் துன்புறுத்தப்பட்டவர்களும் தங்கள் அனுபவங்களை அறிவிக்கவும்.

கே. சி. நித்தியானந்தா.
செயலாளர்
இனக்கலவர விசாரணை விபரம் திரட்டும் குழு.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனை,
இல. 676, காலி வீதி,
கொழும்பு-3,
-12-1977.

### ஆகஸ்ட் — செப்டம்பர் குழப்பங்களால் பாதிக்கப்பட்டோர்
### PERSONS AFFECTED BY AUGUST-SEPTEMBER DISTURBANCES

1. (அ) பாதிக்கப்பட்டவர் பெயரும் முகவரியும்;-
   (ஆ) வயது:- (இ) விவாகமானவரா:-
2. தொழில்:- தொழிலிடம்:-
   பாதிக்கப்பட்ட பொழுது வசித்த இடம்:-
3. ஆணைக்குழு விசாரணையின்போது தொடர்புகொள்ள வேண்டிய நிரந்தர முகவரி:
4. உயிர், அங்கம், வீடு, பொருள் ஆகியனவற்றின் இழப்பு பற்றிய விபரம்:-
   (அ) கொல்லப்பட்டவர் பெயர்கள்:-
   (ஆ) காயப்பட்டவர் / துன்புறுத்தப்பட்டவர்கள் பெயர்கள்:-
   (இ) இழந்த வீடு, எரிக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட வீட்டு விபரங்கள்:-
   (ஈ) இழந்த வீட்டு/கடை உரிமை:-
   சொந்தம் / வாடகை / குத்தகை.
   (உ) இழந்த கடை விபரம்:-
   (ஊ) இழந்த பணம்:-
   (எ) இழந்த நகை:-
   (ஏ) ஏனைய பொருட்களின் விபரம்:-
5. தொழிலிடங்களில்/துன்புறுத்தப்பட்டவர்கள்:-
6. (அ) கொல்லப்பட்டவரில் தங்கியிருந்தவருக்கு நட்டஈடு மதிப்பீடு ரூ...... ...
   (ஆ) காயப்பட்டவருக்கு நட்டஈடு மதிப்பீடு ரூ..........
   (இ) இழந்த அல்லது சேதப்பட்ட வீடு நட்டஈடு மதிப்பீடு ரூ............
   (ஈ) இழந்த அல்லது சேதப்பட்ட கடை நட்டஈடு மதிப்பீடு ரூ...........
   (உ) இழந்த பணம் ரூ............
   (ஊ) இழந்த நகை மதிப்பீடு ரூ............
   (எ) இழந்த ஏனைய பொருட்களுக்கு நட்டஈடு மதிப்பீடு ரூ............
   மொத்தம் ரூ........................
   (இயன்றவரையில் பெறுமான மதிப்பீடு பெறுதல் விரும்பத்தக்கது)
7. [அ] சம்பவம் நடந்த திகதி:-
   [ஆ] சம்பவம் எவ்வாறு நடந்தது:-
8. [அ] கொலை செய்தவர், உங்களைத் தாக்கியவர் அல்லது வீடு/கடை/பொருட்களை கொள்ளையடித்தவர்கள்/சேதப்படுத்தியவர்கள் யார்?
   [ஆ] அவர்கள் தொடர்பான விபரம் தருக;-
   [இ] சாட்சிகளின் பெயரும் விலாசமும்:-
9. [அ] எவ்வாறு மீட்கப்பட்டீர்—முகாம்/நாமே/பொலிஸ்படை/இராணுவம்/அயலார்/மற்றும்.
   [ஆ] மீட்கப்பட்ட திகதியும் நேரமும்;-
10. ஆணைக்குழுவின் முன் சான்றளிக்கச் சம்மதமா?
11. வேறு தகவல்கள்:-

உறுதிப்படுத்துபவர் ஒப்பம்.

........................
திகதி:-

7928

# சஞ்சய் காந்தியின் கார் வேகமாகச் செல்ல வீடுகள், தொழிற்சாலைகள் இடிக்கப்பட்டன

## எதிர்த்தவர்கள் 6 பேர் துப்பாக்கிக்கு இரை

•'ஷா'கமிஷன்முன் திடுக்கிடும் தகவல்

புதுடில்லி, டிச 16 முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் புதல்வர் சஞ்சய் காந்தியின் கார் வேகமாகச் செல்வதற்கு இடைஞ்சலாக டில்லி கிராமம் ஒன்றில் இருந்த வீடுகளும் தொழிற்சாலைகளும் இடிக்கப்பட்டனவாம்.

இந்த அதிர்ச்சித் தகவல் நேற்று 'ஷா' கமிஷன் முன் தெரிவிக்கப்பட்டது.

ஷா கமிஷன் முன் தெரிவிக்கப்பட்ட மேலும் சில விபரங்கள் வருமாறு:

1975ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை சஞ்சய்காந்தி தமது மாருதி தொழிற்சாலைக்குச் செல்லும் வழியில் அவரது கார் வேகமாகச் செல்ல இடைஞ்சலாக இருந்த சில வீடுகளும் தொழிற்சாலைகளும் பட்டறைகளும் அவற்றுக்குச் சொந்தக்காரர்களின் அனுமதியின்றி இடித்துத் தள்ளப்பட்டனவாம்.

இவற்றை எதிர்த்துக் கேட்க எவருக்கும் நீண்ட நாட்களாக துணிவு ஏற்படவில்லை. எனினும் எதிர்ப்புக்காட்டிய ஒருகோஷ்டியினர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் 6 பேர் பலியானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# பலஸ்தீனப்பிரச்னைதீர்ந்தாலே ம. கி. சமாதானம் சாத்தியம்

## அமெரிக்க ஜனாதிபதி கருத்து

வாஷிங்டன், டிச. 16 "பாலஸ்தீனியர்களின் பிரச்னை தீர்க்கப்படாதபட்சத்தில் மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவது அசாத்தியம்' என்று அமெரிக்கஜனாதிபதி திரு ஜிம்மிகார்ட்டர்கூறியிருக்கிறார்.

வாஷிங்டனில் திரு கார்ட்டர் அளித்த பேட்டியொன்றில் மேலும் கூறியிருப்பதாவது: அரபு பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலியர் வெளியேற வேண்டும். பாலஸ்தீனியர்களின் பிரச்னை தீர்க்கப்பட்டாலே மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படும்."

தற்போது நியூயோர்க்கில் உள்ள இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் திரு. கார்ட்டரைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கூட்டணி எம். பிக்களுக்கும் ரெனிக்கும் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் ரெண்டர் முறையை அகற்றுவதற்கு நிதி அமைச்சர் இணங்கியுள்ளமை சீவல் தொழிலாளருக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமையும். ரெண்டர் முறைக்குப் பதிலாக விறகப்படும் ஒவ்வொரு போத்தல்களுக்கும் 15 சதத்துக்குட்பட்ட தொகையை இனிமேல் அறவிடப்படும். இதனால் நியாயமான தொகையை வருடமுடிவில் இலாபப் பணமாக தொழிலாளரும், ஊழியரும் பெறக்கூடியதாக இருக்கும்.

மேற்கண்டவாறு நிதி அமைச்சரின் மகாநாட்டில் கலந்துகொண்ட சமாசச செயலாளர் திரு. க. நடராசா கூறினார்.

அடுத்த வருடத்திலிருந்து சீவல் தொழிலாளரின் வாழ்வில் மேலும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படக் காரணமாக இந்த கூட்டணி எம். பிக்களுக்கும், நிதி அமைச்சருக்கும் திரு நடராஜா நன்றி தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய புயல்—வெள்ள அழிவு:

# 'துயரில்எமக்கும்பங்குண்டு' தேசாய்க்கு ஜே.ஆர். கடிதம்

(கொழும்பு)

தென்னிந்திய மாநிலங்களில் ஏற்பட்ட புயல், வெள்ள நிவாரணப்பணிகளுக்கு இலங்கை அரசாங்கம் பத்து லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இத்தொகையுடன் இலங்கை அரசாங்கம் 1000 கிலோகிராம் தேயிலையையும் நன்கொடையாக வழங்கியிருக்கிறது.

இந்த நன்கொடைகளை அனுப்பிவைத்து பிரதமர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன பாரதப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய்க்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் பின்வருமாறு கூறியிருக்கிறார்: தென்னிந்திய மாநிலங்களில் இயற்கையினால் ஏற்பட்ட பாதிப்புக்கு எம்மால் அளிக்கப்படும் சிறு பங்கு இது. எமது அயல் நாட்டிற்கு ஏற்பட்ட துயரில் நாமும் பங்கு கொள்கிறோம். பாரதமக்கள் உங்கள் தலைமையில் பலமும், திடமும் பெறுவர் என்பது நிச்சயம். 1000வருடங்களுக்கு மேற்பட்ட எம நாடுகளுக்கு இடையிலான நட்புறவும் எமது இருவாது பதவிக்காலங்களிலும் வலுப்பெறுவதாக". (உ)

## நல்லை ஆதீனத்தில் வாதவூரர் புராண விரிவுரை

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்த ஆதீனத்தில் திருவெம்பாவை விழாவை முன்னிட்டு இன்று தொடக்கம் தினமும் மாலை 4 மணிக்கு ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகளது பிரதமசிஷ்யன் ஊரெழு பிரம்மஸ்ரீ சிவ வை சித்தியானந்தசர்மா திருவாதவூரடிகள் புராணம்" இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார். (அ)

## புராணப்படிப்பு

சூராவத்தை முத்துமாரியம்மன் கோவிலில் திருவெம்பாவை உற்சவதினங்களில்பிற்பகல் 3 மணியளவில் திருவாதவூரடிகள்புராணபடிப்புநடைபெறவிருக்கின்றது. இதனை பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் ஆரம்பித்துவைப்பார்.(அ)

## சுன்னாகத்தில் முடிச்சுமாறிகள்: பொலிசார் தீவிரம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் சந்தை, பஸ் நிலையப்பகுதிகளில் முடிச்சுமாறிகளின் கொட்டத்தை அடக்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஜனாப் இ. ஏ ஏ காதர் மாற்றுடைப் பொலிசாரை மேற்படி பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபடுத்தியுள்ளார்.

இரவு வேளைகளில் பொலிஸ் ரோந்து நடவடிக்கை அதிகரிக்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### வியாபாரிகள் மீதும் கண்ணோட்டம்

விலைக் கட்டுப்பாட்டுச்சட்டத்தை மீறுவோர் மீதும் சுன்னாகம் பொலிசார் தீவிர வேட்டை நடத்தி வருகின்றனர்.

இன்ஸ்பெக்டர் ஜனாப் இ. ஏ. ஏ காதர் தலைமையிலான பொலிஸ்கோஷ்டி கொத்தமல்லியை விலைகூட்டி விற்றதாகக் கூறப்படும் வர்த்தகர் ஒருவரையும், பதுக்குவதில் ஈடுபட்டதாக வர்த்தகர் ஒருவரையும் கைதுசெய்தனர். [உ]

## கைது

(கிருலப்பனை)

40,000 ரூபா பெறுமதிமிக்க கார் ஒன்று திருடப்பட்டது தொடர்பாக தர்மசிறி என்பவர் கிருலப்பனைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இ.போ.ச சாதனை

(கொழும்பு)

இ.போ.ச. 20 வருடகாலத்தில் இல்லாதவாறு கடந்த மாதம், ஆகக்கூடுதலான வருமானத்தைப்பெற்று சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

6 கோடி 30 லட்சப் ரூபாவே சாதனைக்குரிய வருமானமாகும்.

அக்டோபர் மாத வருமானத்தைவிட இது 10 லட்சம் ரூபா அதிகமாகும். (இ)

சுசி
∴ கலண்டர்கள்
∴ டயறிகள்
∴ பிளாஸ்டிக் டயறிகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்
V
வடபகுதி விநியோகஸ்தர்கள்
S. P. சாமி அன் கொம்பனி
193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

# கருணாநிதிக்கும் கறுப்புக் கொடி!

## காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க. தொண்டர்கள் கைது

சென்னை, டிச. 16 சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் மு. கருணாநிதிக்கு கறுப்புக்கொடி காட்டும் நடவடிக்கையில்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினரும் ஈடுபட்டனர்.

மன்னார்குடியில் இதுதொடர்பாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 5பேரும், அ இ. அ. தி. மு. க. ஆதரவாளர்கள் நால்வரும் கைதாகினர்.

கருணாநிதிக்குகறுப்புக்கொடி காட்டுவதைக் கைவிடுமாறு காங்கிரஸின் தமிழ்நாடு தலைவர் திரு கருப்பையா மூப்பனார் கேட்டுக்கொண்டுள்ளார்.

தி. மு. க தலைவர்கள்கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டுவதென அ இ. அ. தி. மு. க. தீர்மானிக்கவில்லை என்று அதன் செயலாளர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

கடந்த அரசு காலத்தில்

## நேர்முகப் பரீட்சையின்றிக் காணி வழங்கினராம்

[எழுதுமட்டுவாள்].

"முன்னாள் அரசியல் அதிகாரி திரு. சி. அருளம்பலம் நேர்முகப் பரீட்சையின்றி யாழ் நகர வாசிகளுக்கு, முகமாலைத்தி அறத்தான் என்ற காட்டுக் காணியைப் பகிர்ந்தளித்தார். இரண்டு வருடமாகியும், அக்காணிகளில் காடு வெட்டப்படவில்லை"

எழுதுமட்டுவாள் கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா விவசாய விரிவாக்கக் கூட்டுறவுப் பண்ணையில் நான்காவது ஆண்டுவிழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு வே. சங்கரப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்

திரு. சங்கரப்பிள்ளை மேலும் பேசுகையில், காடுவெட்டப்படாமலிருக்கும் இக்காணியை காணியமைச்சர் கூட்டுப்பண்ணை இளைஞர்களுக்கு வழங்கவேண்டுமென்றும், கடந்த அரசினால் காணி சுவீகரித்துக் கொள்ளப்பட்டதின்படி, உணவு உற்பத்தியில் தீவிர அக்கறை கொண்ட விவசாயிகளுக்குக் காணி பகிர்ந்து கொடுக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்ததென்றும் விவசாயம் பற்றி தெரியாதவர்களுக்கும், விவசாயம் செய்யக்கூடிய காணிச் சொந்தக்காரர்களுக்கும், மறைமுகமாகத் தென்மராட்சிப் பிரிவிலும் பச்சிலைப்பள்ளி பிரிவிலும், காணி வழங்கப்பட்டதெனறும் கூறினார்

தலைவராக திரு. வே. சங்கரப்பிள்ளையும், செயலாளராக திரு செ. கணேசலிங்கமும், தனாதிகாரியாக திரு. தா கோபாலபிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர். [க-அ]

# மாவிட்டபுரம்கொலைவழக்கு: எதிரிகள் மூவரும் விடுதலை

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் கொலைவழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் ஜஸ்டிஸ் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மாவிட்டபுரத்தில், 76-ம் ஆண்டு செப்டம்பர் 13-ம் திகதி கா. வைரமுத்து என்பவரைக் கொலை செய்ததாக காத்தமூர்த்தி, திருலோகசிங்கம், பாலசிங்கம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி எஸ். சுரேந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானார். 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் சட்டத்தரணி கே. பி. எஸ். வரதராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார். 3-ம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். அரசு தரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் ஆஜரானார்.

நேற்றுக் காலை எதிர்தரப்பு சட்டத்தரணிகளும், அரசு தரப்பு சட்டத்தரணியும் தொகுப்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து நீதிபதி உரை நிகழ்த்தினார். இதன் பின் ஜூரிசபையினர் தனிமையில் கூடி ஆலோசனை செய்தபின் எதிரிகள் நிரபராதி என ஏகமனதாக தீர்ப்பளித்தனர். [க-அ]

# அச்சுவேலி ப. நோ. கூ. ச, கொள்ளை: 3வது எதிரி உதயணனும் பரீட்சை எழுதினர்

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கொள்ளைவழக்கில் மூன்றாவது எதிரியான உதயணனும் 50,000 ரூபா பிணையில் சென்றார்.

இவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டவுடன் நேரடியாகப் பரீட்சைநிலையத்திற்குச் சென்றார். நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்த ஆங்கிலப் பரீட்சையில் இவர் தோற்றினார்.

ஏற்கனவே, 1ம், 2ம் எதிரிகள் தலா 50,000 ரூபா பிணையில் சென்றிருந்தனர்.

1ம், 2ம் எதிரிகளும் நேற்று நீதிமன்றம் வந்திருந்தனர். 3 எதிரிகளும் ஜி. சி. ஈ. பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

# முழுகப்போன பெண்மீது துலா விழுந்து பலி!

(யாழ்ப்பாணம்)

கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் சமைத்துவைத்துவிட்டுக் கிணற்றடிக்கு அரப்புத் தேய்த்துக்கொண்டு நீராடச் சென்றவர், தலைமீது துலா விழுந்ததால், அவ்விடத்திலேயே துடிதுடித்து மாண்டார்.

யாழ் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த துரைசிங்கம் செல்வநாயகி அம்மாளின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

துலாமீது ஒரு தென்னை மரம் விழுந்ததால், துலா முறிந்து இறந்தவர்மீது விழுந்ததாகவும், மயக்கமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட செல்வநாயகி அங்கு மரணமானாரென்று விசாரணையில் தெரியவந்தது.

விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க-அ)


## திருவெம்பாவை பூஜைக்கு

தேவையான

- விளக்கு சூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம் (உடன் யந்திரத்தினால் அரைக்கப்பட்டது)
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனாதிகள்; பன்னீர்; அத்தர்
- கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள் (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த 42 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி,

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை, வியாபாரிகளும்)

191, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்,

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11

போன்: 541 Residence 7068 கொழும்பு: 35825


# பேரவையில் சிந்தியவை

அமிர்: நாம் சிங்கள மொழியை சகோதர மொழியாகக் கற்கவிரும்புகிறோம் ஒழிய எஜமான மொழியாகக் கற்கமாட்டோம்.

ஜாபிர் ஏ காதர் [கொழும்பு மத்திய 2வது எம். பி] ஏன் நீங்கள் முன்னர் ஆங்கிலத்தையும் கிரேக்கத்தையும் எஜமான மொழியாகக் கற்கவில்லையா?

அமிர்: யார் அது? கொழும்பு மத்தியதொகுதியின் முதல் எம். பியா? 2வது எம். பியா? 3வது எம். பியா?

பேர்ஸி சமரவீர: இரண்டரைக்கால்.

[சிரிப்பு]

மொழித் திணிப்பு பற்றி அமிர் பேசும்போது சபையில் சிறிது பரபரப்புக் காணப்பட்டது. அமிர்தலிங்கம் எதையும் விட்டுவைக்கவில்லை ''நாம் உண்மை நிலையைக் கூறும்போது நீங்கள் ஏன் பரபரப்படைகிறீர்கள்?'' என்று சபையோரைப் பார்த்துக் கேட்டார்.

அமிர்: இந்தியாவில் கல்வி முறை பற்றி ஆராய்ந்த கோதாரிக் கமிஷன் முதல் மொழியாக தாய்மொழியையும் 2வது மொழியாக ஆங்கிலத்தையும், 3வது மொழியாக ஹிந்தியை அல்லது வேறொரு மொழியைக் கற்கவேண்டும் என்று சிபார்சுசெய்தது. ஆனால் ஹிந்தி பேசும் மக்கள் 3வது மொழியைக் கற்கமறுத்ததினால் அத்திட்டம் தோல்வி அடைந்தது.

கல்வி அமைச்சர்: நாம் வடஇந்தியர்களைப்போல் அல்ல, நாம் பண்புள்ளவர்கள். பண்பாக நடப்போம்.

பேர்ஸி சமரவீர: நாம் தமிழ் படிப்பதை நீங்கள் விரும்பவில்லையா?

அமிர்: அது வேறு விடயம். முதலில் மொழிப் பிரச்னையைத் தீர்த்துவையுங்கள். பின்னர் மும்மொழித்திட்டம்பற்றி ஆலோசிப்போம்.

●

அமிர்: நாம் முன்னர் யாழ்ப்பாணம் கச்சேரி முன் சத்தியாக்கிரகம் இருந்தபோது அப்போது யாழ். அரசாங்க அதிபராக இப்போதைய கல்விஅமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன, எம்முடன் தமாஷாகப் பேசுவார். ஒருநாள் அவர் தமக்கு அன்று பகல் விருந்தா, இரவு விருந்தா வைக்கப்போகிறீர்கள் என்று கேட்டார். அதைப் பார்த்த எமது மக்கள் நாம் எதிரிகளோடும் வேடிக்கையாகப் பேசுகிறோம் என எண்ணியிருப்பார்கள். ஆனால் கல்விஅமைச்சர் நல்லவர். எந்த அரசுடனும் ஒத்துப்போகக் கூடியவர்.

●

அமிர்: கனிஷ்ட பல்கலைக்கழகங்களில் படித்தவர்கள் பல்கலைக்கழகக் கல்வியை ஒத்த திறமை இருந்தும் இன்று வேலையில்லாமல் இருக்கிறார்கள். உடன் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளியுங்கள். (அ-இ)

# மார்கழி மாதமும் வைகறை வழிபாடும்

மார்கழி மாதம் பிறந்துவிட்டது. மார்கழி மாதம் சிறந்த மாதம். கலியிற் சிறந்தவர் சூரியமூர்த்தி. அவர் தேவ குருவாகிய வியாழபகவானின் வீடாகிய தனுர்ராசியில் சஞ்சரிக்கின்ற மாதம் மார்கழி. அதனால் மாதங்களில் மார்கழி உயர்வுபெற்றது. கண்ணபிரான் கீதையில் 'அர்ஜுனா நான் மாதங்களில் மார்கழியாக இருக்கிறேன்' என்கிறார். இம்மாதமே தீட்சைக்குரிய மாதமுமாகும். இதற்கு மற்றுமொரு சிறப்புண்டு. மார்கழி மாதத்தில் பன்னிரு திருமுறைகளையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டுத் திருவெம்பாவை மட்டுமே ஓதவேண்டும். இது இன்றும் நிகழ்கின்ற ஆகமரீதியான மரபு.

சங்கீத கதாப்பிரசங்க வித்துவான் சிவ. ஸ்ரீ. வை. நித்தியானந்தசர்மா

பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தில் திருவாதிரைத் திருவிழாவும், பூலோகவைகுந்தமாகிய ஸ்ரீரங்கத்தில் ஏகாதசி நல்விழாவும் நடைபெறுவது மார்கழியில்தான். இம்மாதம் வைகறையில் செய்யும் வழிபாட்டைப்பற்றி சிவாகமம் அழகாகவும் தெளிவாகவும் சொல்கிறது.

'சாபகத பாது நிவஸாந்த்ய நிசிகாலே
ஆதிசிவ தேவ் யாஸஹ ஏகதின பூஜா
ஏகதின பூஜாபலம் சோடி தினே நாஸ்தி
இந்திர பதி இந்திரசவ கோடிதின வாஸம்'

இதன் தாத்பரியம் யாதெனில், தனுர் ராசியில் சூரியன் சஞ்சரிக்கின்ற மாதமாகிய மார்கழியில், வைகறையில் உமையம்மையுடன் கூடிய சிவபெருமானை ஒருநாள் வழிபடுவார்களாயின், அந்த ஒருநாள் பூஜைக்கு, மற்றும் கோடி நாள்களின் பூஜை நிகராகாது என்பதாகும். மேலும் மார்கழி மாதம் வைகறையில் ஒருநாள் சிவமூர்த்தியை வழிபட்டவர்கள் இந்திரனைப் போன்ற சிறப்புடன் சிவபோகத்தில் தேவஆண்டில் கோடிநாட்கள் இன்புற்று இனிது வாழ்வார்கள். நமது ஆண்டுகளில் முன்னூற்றறுபது கொண்டது ஒரு தேவ ஆண்டு என்பர். உத்தம பிறப்பெடுத்த நாம் இத்தகைய புனிதமான மார்கழி மாதம் வைகறைப் பொழுதில் கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காது, துயில் எழுந்து நீராடி, நீறுபூசி திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி என்கின்ற இனிய இரு நூல்களையும் பக்தி பரவசத்துடன் பாராயணம் புரிதல் வேண்டும். அங்ஙனம் பாராயணம் புரிந்து வைகறையில் வழிபடுவோர்க்கு ஆணவ இருள் நீங்கி சிவஞான ஒளி உண்டாகும். அதுமட்டுமன்றி அகத்திலும் அறத்திலும் நின்று சிவனருளால் இகம், பரம் என்ற இருமை நலன்களையும் பெறுவார்கள். ஆகவே மார்கழி மாதத்தில் விடியற் காலையில் முழுகி, திருநீறு தரித்து ஒருமைப்பட்ட மனத்துடன் வழிபடுபவர்கள் துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமும்பெற்று உய்வர். (அ)

# 'சேர். பொன். இராமநாதனை சிங்களவரும் சிறந்த வீரராக மதித்தனர்' — அமைச்சர் காமினி

[கொழும்பு]

''சேர் பொன் இராமநாதன் தமிழ் மக்களால் மட்டுமல்ல சிங்கள மக்களால்கூட ஒரு சிறந்த வீரராக மதித்து கௌரவிக்கப்பட்டார்''

இவ்வாறு நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா கொழும்பில் சேர். பொன். இராமநாதன் நினைவுகூரப்பட்ட நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில், 'சேர் பொன். இராமநாதன், வெளிநாட்டார், எம் தனித்துவத்தை பாரம்பரியத்தை சிதைக்கவிடாது காப்பாற்றிய பெருமகன்' என்றார். [உ]

# அளவெட்டி வாசிக்கு குருணாகலில் அதிர்ச்சி சம்பவம்

[குருணாகல்]

அளவெட்டி வாசி ஒருவருக்கு குருணாகலில் அதிர்ச்சி அனுபவம் கிடைத்தது.

ஆம், அவர் சற்றே அசமந்தமாக இருந்தபோது 10,950 ரூபா பெறுமதிமிக்க பொருட்களுடன் கூடிய அவரது பிரயாணப்பை திருடப்பட்டுவிட்டது.

அளவெட்டியைச் சேர்ந்த ரி சிவபாலன் என்ற இந்நபர் சம்பவதினம் ரயில்மூலம் குருணாகல் வந்து அருகிலுள்ள பஸ் நிலையத்தில் காத்திருந்தாராம்.

வாகனம் ஏதாவது வராதா என்று அவர் சற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருந்தபோது அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது பிரயாணப்பை திருடப்பட்டிருந்தது.

பதறித்துடித்த சிவபாலன் குருணாகல் பொலிஸில் இதுபற்றி புகார் செய்துள்ளார்.

இப்பிரயாணப்பையில் 10,000 ரூபா ரொக்கமும், கமரா உட்பட 950 ரூபா பெறுமதிமிக்க பொருட்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# கடற்கரையில் பிரசவித்தார்

[காரைநகர்]

கர்ப்பிணிப் பெண் ஒருவர் ஆஸ்பத்திரி நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது கடற்கரையிலேயே பிரசவித்தார்.

காரைநகர் ஊரியைச் சேர்ந்த இப்பெண்ணுக்குப் பிரசவ அறிகுறி தென்படவே அவரது தாயார் அவரை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றாராயினும் வாகன வசதியின்மையால் கடற்கரை ஓரமாக அவர்கள் ஆஸ்பத்திரிக்கு நடந்து சென்றுகொண்டிருந்த சமயம் அப்பெண்ணுக்குப் பிரசவ வேதனை அதிகரித்துக் குழந்தையைக் கடற்கரையிலேயே பிரசவித்தார். [அ]

# கூட்டமும் மௌனவிரதமும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரவுன் வீதியில் உள்ள சங்கைக்குரிய பாவா முஹையத்தீன் ஆச்சிரமத்தில் இன்று பிற்பகல் 4 மணியளவில் வருடாந்தக் கூட்டம் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வருடாந்த மௌனவிரதம் நடைபெறும். (அ)

வெலிங்டன்? (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
காத்திருப்பேன் உனக்காக

நாகபூஷணி? (சுன்னாகம்)
தினசரி பி ப 6-45, 10-00
சனி, ஞாயிறு பி ப 2-30
எம் ஜி ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2.30, 6 00, 9.30.
எம். ஜி. ஆர் -விஜயா, நாகேஷ் நடித்த
விவசாயி
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி வைஜயந்திமாலா
தேன் நிலவு [புதிய பிரதி]

Regal (Jaffna)
"KRAKATOA" IS A STUNNER!
A Grand Adventure spectacle designed to knock you out.
It is Sensational. An artistic and technical triumph.
Adults may find themselves biting their nails.
Now running to packed houses in its
2nd Week 70 M. M
"Krakatoa East of Java"
Cinerama wide screen! [Techni color]
Daily at 4-15 7-00 & 9 30 P. M. only
Sat, Sundays 10-30, A.M. 1-30 4-15 7 00 & 9-30P.m.

11-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, விஜயகுமாரி, கே. ஆர். விஜயா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்
தந்தை செல்வாவின் இறுதியாத்திரை
வெகு விரைவில் இப்படத்துடன்
காண்பிக்கப்படும்.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
முத்துராமன்—விஜயா நடித்த
ரோஷக்காரி (புதிய பிரதி)

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம் எஸ் விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய் விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
முத்தான முத்தல்லவோ

லிடோ எம். ஜி. ஆர். லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

"இந்துப் பண்பாடு

# அனைவரும் பின்பற்றக்கூடிய நெறிமுறைகளைக் கொண்டது"

— பேராசிரியர் சோ. செல்வநாயகம்

[யாழ்ப்பாணம்]

"இந்துப் பண்பாடு எந்தக் காலத்திலும் நிறுவன ரீதியாகக் கட்டுப்படுத்தப்படாததாகவும், எல்லோரும் பின்பற்றக்கூடிய நெறிமுறைகளைக் கொண்டதாகவும் சிறப்புப் பெற்றது."

இவ்வாறு பேராசிரியர் சோ செல்வநாயகம் யாழ் வளாக இந்து மன்றத்தினரால் நடத்தப்பட்ட இந்துப் பண்பாட்டுக் கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்

இராமநாதன் வளாக மண்டபத்தில் மன்றத் தலைவர் திரு சு. பாக்கியநாதன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. பேராசிரியர் செல்வநாயகம் மேலும் பேசுகையில், "பல்வேறு சமயக் கருத்துக்களையும், ஒழுக்க மரபுகளும் இந்துப் பண்பாட்டிற்குப் பொருந்தி அமையக்கூடிய வகையில், பல நதிகளும் சங்கமிக்கும் சமுத்திரமாக இந்துப் பண்பாடும், இந்து சமயமும் அமைந்துள்ளது இந்து சமயம் சமூகத்தின் எல்லாவித நலன்களுக்கும் அடிப்படைகளைக் கொண்ட உயிர்த்துடிப்புள்ள ஒரு சமயமாகும்" என்றார்.

திரு ச. விநாயகமூர்த்தி பேசுகையில், "சமூக நலன் என்பது புறத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதோடு மட்டும் அமைவதில்லை ஆத்மீக உள்ளொளி பெறுவதையே இந்துப் பண்பாடு மெஞ்ஞானிகள் கருத்திற்கொண்டனர் என்றார்.

இந்துப் பண்பாட்டுத்துறை துணை விரிவுரையாளர் திரு. ப கோபாலகிருஷ்ணன் பேசுகையில், "பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை நவீன காலத் தேவைகளுக்கேற்ப சமூக நலனை நோக்கிச் சிந்திப்பதாகும் தேவையானவகையில் புதிய கருத்துக்களைப் புகுத்துவதற்கும் அறிஞர்கள் முன்வரவேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். [உ]

## தலைவராக தயாளன் தெரிவு



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ் தயாளன் இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டக் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு 8வது தென்கிழக்கு ஆசிய பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டிக்குப் புதுடில்லி ஆக்ராவுக்கு இலங்கைக் குழுவுடன் விமான மூலம் பயணமானார்.

தயாளன் 1976லும் இலங்கைப் பாடசாலைகள் குழுவில் அங்கம் வகித்தார் என்பதும் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டியில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குழுவின் தலைவராயிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1970லிருந்து மேற்படி கல்லூரியின் மூன்றாவது, இரண்டாவது, முதலாவது உதைபந்தாட்டக் குழுக்களில் தொடர்ந்து இவர் ஆடிவந்துள்ளார் பலதுறை விளையாட்டுக்களிலும் வீரரான இவர் மெய்வல்லுநர், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், ஹொக்கி விருதுகளைக் கல்லூரியில் பெற்றுள்ளார்.

இலங்கைப் பாடசாலைகள் மெய்வல்லுனர்போட்டி 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஈட்டி எறிதலில் சிறந்தசாதனை இவருடையது.

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டக் குழுவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஏனைய வீரர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வே பாலகுமாரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த ஏ. அழகரத்தினமும் ஆவர். [அ]

## கல்வி இலாகாவுக்கு ஆண்-பெண் பேதம் தெரியவில்லை?

[அரியாலை]

இம்மாதம் 14ந்திகதி ஆரம்பமான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு நல்லூரைச் சேர்ந்த ப ஜீவநாதன் மனையியல் பாடத்திற்கு விண்ணப்பித்திருந்தார். ஆனால் பெண்களுக்கான மனையியல் செயல்முறைப் பரீட்சைக்கு வேண்டிய உபகரணங்களுடன் தோற்றும்படி அவருக்கு வித்தியாபகுதியிலிருந்து பதில் வந்துள்ளது. பரீட்சைப் பகுதியின் குளறுபடியினால் இம்மாணவன் பரீட்சைக்குத் தோற்றமுடியாததில்லை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## எதிரி விடுதலை

[கொழும்பு]

பலாத்கார நோக்கத்துடன் திருமணமான பெண்ணைக் கடத்திச்சென்றதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்டவழக்கில் எதிரி எச்சரித்து விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி பட்ரம் செனிவரத்தின முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 76 நவம்பர் 11ம் தேதி சிலுவவில், திருமணமான பியசீலி என்றபெண்ணை பலாத்கார நோக்குடன் கடத்திச் சென்றதாக கே. சுனில் என்பவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஜீ ஜீ பொன்னம்பலம் [ஜூனியர்] ஆஜரானார். வாசகரப் பில் சட்டத்தரணி ஜோ பெரேரா ஆஜரானார். [ச]

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப 2-30, 6-30
கருந்தேள் கண்ணாயிரம்

RIO (Jaffna)
Daily 4 Shows
MARCOPOLA
THE MAGNIFICENT
(Color-Scope)

## "இலக்கிய முன்னோடி இரசிகமணி"

[யாழ்ப்பாணம்]

"ஈழத்து எழுத்தாளர்களைத் தமிழ்கூறும் நல்லுலகுக்கு அறிமுகப்படுத்திய இலக்கிய முன்னோடி இரசிகமணி கனக செந்திநாதன்" என்று யாழ் வளாக மண்டபத்தில் நடந்த இரசிகமணி அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறினார்.

திரு மு. திருநாவுக்கரசு தலைமையில் நடந்த கூட்டத்தில், பேராசிரியர் வித்தியானந்தன் மேலும் கூறியதாவது: "எந்த விதத்திலும் ஈழத்து எழுத்தாளர்கள் தமிழக எழுத்தாளர்களுக்குப் பின்தங்கியவர்களல்லரென்பதைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்துக் கூறியவர் இரசிகமணி கனக செந்திநாதன்.

"தற்போது ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மந்தமான நிலை காணப்படுகிறது. இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு இலக்கியச் செல்வர் கனக செந்திநாதன் போன்றோரின் இலக்கியப்பணிகளை சீர்தூக்கிப்பார்ப்பது அவசியமாகும்."

'சொக்கன்' பேசுகையில் கூறியதாவது: பண்டிதமணியின் பண்ணையில் வளர்ந்த புலவரில் இரசிகமணி கனகசெந்திநாதனும் ஒருவர். அவரது இலக்கியத் துறைப்பணிகள் அவர் வாழ்ந்த காலகட்டத்தின் தேவைகளை நிறைவுபெறச் செய்கின்றன. ஒரு எழுத்தாளருக்குரிய திறந்தமனத்தினராக அவர் திகழ்ந்தார்.

திரு. நா. சுப்பிரமணியஐயர், திரு. ந நாகேஸ்வரன் உட்பட மற்றும் பலரும் பேசினர். [சு-அ]

## 3 வாகனங்கள் மோதல்

[திருநெல்வேலி]

ஒரே இடத்தில் மூன்று வாகனங்கள் மோதிக்கொண்ட சம்பவம் ஒன்று இரு தினங்களுக்குமுன் நண்பகல் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திச் சதுக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மொரிஸ்மைனர் காரொன்று அதே திசையில் வந்துகொண்டிருந்த 'ஏ-40' கார் ஒன்றுடன் மோதியபின் அத்து கோண்டாவில் பகுதியிலிருந்து வந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸுடன் மோதிக்கொண்டது இதனால் மொறிஸ்மைனர் கார் பெருஞ் சேதத்திற்குள்ளாகியது.

இம்மோதலில் பாதைப் போக்குவரத்துத் தடைப்பட்டது எனினும் எவரும் காயமடையவில்லை.

## 250 ரூபா அபராதம்

[பண்டத்தரிப்பு]

ஒரு றாத்தல் பாணின் கட்டுப்பாட்டுவிலை 64 சதமாக இருக்கையில், ஒரு சதம் கூட்டி 65 சதமாக விற்பனை செய்த தனியார் கடைக்காரர் ஒருவருக்கு 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## மணிவாக்கு

ஒரு நிர்வாகத்தின் அதிகாரத்துக்கு ஒருவன் அமையும்போது, தற்சுதந்திரத்தை விலக்குக் கொடுக்கிருனென்பதே அச்சேயலின் கருத்தாகும்.

— காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## பனம்பொருள் கூட்டுத்தாபனம்

பனம் பொருள் உற்பத்தி அபிவிருத்திக்காக பனம் பொருள் கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்படும் என்று தோட்டத்துறை அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன தேசிய அரசப் பேரவையில் கூறினுர்.

பனையிலிருந்து பெறக்கூடிய பொருள்களிலிருந்து என்னென்ன கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பதைக் கண்டறியவும் அதனைச் செயற்படுத்தவும் பனம் பொருள் கூட்டுத்தாபனம் ஒன்றை நிறுவத்தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்திருக்கிறுர்.

'கற்பகதரு' என்று அழைக்கப்படும் பனையில் அடிமுதல் நுனிவரை எல்லாமே மக்களுக்குப் பயன்தரும் பொருள்கள் தான் என்பதை வடபகுதி எம். பிக்கள் பலரும் தோட்டக் கைத்தொழில் துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடு பற்றிய குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெளிவாக எடுத்துக் கூறினுர்கள்.

தமிழ் நாடும், ஆந்திராவும் பனம் பொருள்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிப்பது பற்றி பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் எடுத்துக் கூறினுர்.

ஒடியல் மாவிலிருந்து 'இன்சுலின்' மருந்து உற்பத்தி செய்யலாமென்று ஜேர்மன் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கிறுரென்றும் ஆயுள்வேதப் பகுதி, பனங்கற்கண்டு இறக்குமதிக்காக ஆண்டுக்கு பதினெரு லட்சம் செலவிடுகிறதென்றும் சுட்டிக்காட்டிய உடுப்பிட்டிப் பிரதிநிதி இவற்றை இங்கு உற்பத்தி செய்ய முடியாதா? என்றும் கேட்டிருக்கிறுர்.

கடந்த பல வருடங்களாக வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பனையின் பயனைப்பற்றி வடபகுதிப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறுவதும் பனையிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களால் உள்நாட்டுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளுவதுடன் வெளிநாட்டுச் செலாவணியும் சம்பாதிக்கலாம் என்றும் எடுத்துக் காட்டுவது வழமையாகி விட்டது.

இதேபோல் பனம் பொருள் உற்பத்தி பற்றிக் கவனம் செலுத்தப்படும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர்கள் உறுதியளிப்பதும் வழமைதான். இதென்னைக்கு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. றப்பருக்கு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. இதுபோல் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் நிறுவவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒன்றும் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு முன்னர் இருந்த அமைச்சர்கள் சிலரும் பனம் பொருள் ஆராய்ச்சிச்சபை, ஆராய்ச்சி நிலையம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கின்றனர்.

ஆனால் இன்னமும் வடபகுதியில் பனைகள் பழைய படியேதான் இருக்கின்றன. ஒருசில பனைகளிலிருந்து சிலர் சில பிரயோசனங்களைப் பெறுகின்றனர். மற்றையவை இன்னமும் அப்படியேதான் நிற்கின்றன.

பனம் பொருள் கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுமென்று தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சர் இப்போது தெரிவித்திருக்கிறுர்.

இந்த அமைச்சரின் முயற்சியாவது செயலில் நிறைவேற வேண்டும் என்பதே மக்களின் ஆவலாகும்.

இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eeanaadu. Telephone 389. Registered as News paper in Sri Lanka.

## 2-வது டெஸ்ட்

சிட்னி, டிச 16

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையில் இன்று ஆரம்பமான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட இறுதியில் இந்தியாக் கோஷ்டி 7 விக்கட் நஷ்டத்துக்கு 329 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. [இ]

## வர்த்தக...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

**கூட்டணி எம்.பிக்கள்**

அமைச்சரின் உத்தியோகரீதியான மகாநாடுகள் மற்றும் நிகழ்ச்சிகளில் மட்டுமே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கலந்து கொள்வார்கள் ஊர்வலங்கள் மற்றும் ஆடம்பர வைபவங்களில் அவர்கள் கலந்து கொள்ளமாட்டார்களென்று அறியப்படுகிறது.

**பகிஷ்கரிப்பு**

அமைச்சர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் கலந்துகொள்ளாமல் பகிஷ்கரிக்க வேண்டுமென்று 'தமிழ் ஈழ் விடுதலை இயக்கம்' தீர்மானித்திருப்பதாக அந்த இயக்கத்தைச் சேர்ந்த திரு. த. முத்துக்குமாரசாமி தெரிவித்துள்ளார்.

அகதிகள் பிரச்சினையை அரசு தீர்க்கத் தயங்குகின்றதென்றும், இத்தகைய வரவேற்புகளில் கலந்துகொள்வது விடுதலை உணர்ச்சியை மழுங்கச்செய்துவிடுமென்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டித் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

**கேள்விவிளம்பரம்**

மேற்படி சங்கத்தில் ரூபா 9,400/- பெறுமதியான சப்பாத்துக்கள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் மொத்த விலையைக் குறிப்பிட்டு 21.12-77-க்கு முன் விண்ணப்பிக்கவும். பொருட்களை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டித் தொகுதி
பி. அ. கூ. சங்கம்,
கரவெட்டி.

7943

"தேன் கூடு"

கதம்ப நிகழ்ச்சி

யாழ்.

திறந்தவெளி அரங்கில்

18-12-77 ஞாயிறு மாலை 6-30

★ தாளவாத்தியக் கச்சேரி
சங்கீதபூஷணம்
ஏ. எஸ். இராமநாதன் குழுவினர்.

★ பரத நாட்டியம்
திரிபுரசுந்தரி யோகானந்தம் அவர்களின்
யாழ். மன்றக் குழுவினர்.

★ நாடகம்
க. செல்வரத்தினம், எஸ். லோகநாதன்,
எஸ். ரி. அரசு, எஸ். எஸ். பிரான்சிஸ்.

வேல் ஆனந்தன் குழுவினரின்

★ நாட்டியாஞ்சலி

புதியகட்டிடத்திறப்புவிழா

19-12-77 காலை 10-00 மணி

இடம்: 571, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

திரு. வெ. யோகேஸ்வரன் யாழ், பா. உ.
திறந்துவைப்பார்.

மாண்புமிகு வர்த்தக அமைச்சர்
திரு. லலித் அத்துலத் முதலி
பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

கதம்ப நிகழ்ச்சியிலும், கட்டிடத் திறப்புவிழாவிலும் கலந்து சிறப்பிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்-யாழ். கிளை.

**மரண அறிவித்தல்**

**திருமதி மங்கயர்க்கரசி பரமேஸ்வரன்**

ஜோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி பரமேஸ்வரன் காலமானுர். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் பொன்னுத்துரை, அன்னம்மா ஆகியோரின் மகளும், மலேஷியா சண்முகம்பிள்ளை, நாராயணலிங்கம் [நெடுஞ்சாலை திணைக்களம்], மலேஷியா நவ சுந்தரலிங்கம், உருத்திரசிங்கம் [கொழும்பு பிரதம வைத்தியசாலை], சோமசூரியசிங்கம் [சிங்கம் பார்மஸி], சுந்தரானந்தா [விவசாயத் திணைக்களம்], காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி இராசதுரை [இளைப்பாறிய ஓவசியர்], திருமதி யோகேஸ்வரி சிவஞானம் பாணி மருந்துச்சாலை], திருமதி ராஜேஸ்வரி சதாசிவம் [அஞ்சல் திணைக்களம்], திருமதி ராஜேஸ்வரி கனகரத்தினம் [விவசாயத் திணைக்களம்] ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னுரின் ஈமக்கிரிகைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும்.

7945

## திருமதி பண்டார-

[1ம் பக்கத் தொடர்ச்சி]

காணிசீர் திருத்தச் சட்டம் பேரவையில் நிறைவேறிய பின்னர், 8 நாட்கள் கழித்தே சபாநாயகர் கைச்சாத்திட்டுள்ளார், என்று திரு. மத்யூ கூறிய போது, அக்காலப் பகுதியில் சனி, ஞாயிறு அரசாங்க விடுமுறை ஆகிய விடுமுறை நாட்கள் வந்தமையால் குறிப்பிட்ட சட்டப் பத்திரங்களை அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டது என்றும் இதன் காரணமாகவே சபாநாயகர் அப்பத்திரங்களில் கைச்சாத்திடுவதற்கு காலதாமதமாகியது என்றும் அது அவரது தவறு அல்ல என்றும் சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் கூறினுர்.

(ம-இ)

**மரண அறிவித்தல்**

**ராமன்பிள்ளை கோவிந்தபிள்ளை**

கபே பாரத் உரிமையாளர் ராமன்பிள்ளை கோவிந்தபிள்ளை காலமானுர். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கேரளாவைச் சேர்ந்த தேவகி அம்மாவின் அன்புச் சகோதரரும், யோகநாத் (முசாஜீஸ்), ரகுநாத் (நியூபாரத்-பேக்கவுஸ்), ஜெகநாத் (பரிஸ்), புஷ்பநாத், ஜோதிநாத் (இங்கிலாந்து), கானவதி, கோபிநாத், கீதவதி, சந்திரநாத், குணவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகுமாரியின் அன்பு மாமனுரும், ரகுராஜ், ரெமிலதா, சௌதா ஆகியோரின் அன்புப் பேரனுரும், பஞ்சலிங்கத்தின் (C. T. B.) மைத்துனருமாவார். இத்தகவலை உற்றுர், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

7941